

தி.மு.கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் கோவை செல்வராஜ் அவர்களின் மறைவையொட்டி நேற்று அவரது இல்லத்திற்கு, மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி நேரில் சென்று அவரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்து அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்தார். உடன் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ. ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் அவரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்து, அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொண்டனர். கழக சொத்துப் பாதுகாப்பு குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா. பழனிச்சாமி, கார்த்திக் செல்வராஜ், ச.கார்த்திகேயன்,சோமு சந்தோஷ், கழக நிர்வாகிகள் அவரது உடலுக்கு மரியாதை செலுத்தினர்.

கழகத்தின் கொள்கைகளை மேடைகளில் ஆணித்தரமாக எடுத்துரைத்தவர்!

# கோவை செல்வராஜ் மறைவு என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தியது!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, நவ.10-**

**கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் கோவை செல்வராஜ் மறைவிற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-**



முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், திராவிட முன்னேற்றக் கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளருமான கோவை செல்வராஜ் அவர்கள் திடீரென்று மரணமடைந்தார் என்ற செய்தி கேட்டு பேரதிர்ச்சிக்குள்ளானேன். அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, கழகத்தின் கொள்கைகளை, கருத்துகளை விவாதங்களிலும், மேடைப் பேச்சுகளிலும் ஆணித்தரமாக எடுத்து வைத்தவர்.

சமீபத்தில் நான் கோவை சென்றிருந்த போது, அங்கு அனைத்து நிகழ்ச்சிகளிலும் ஆர்வத்துடன் பங்கேற்ற அவர், நிகழ்ச்சி நிறைவு பெற்றதும் என்னைச் சந்தித்து, "நிகழ்ச்சி மிகச் சிறப்பாக அமைந்திருந்தது" என்று நெஞ்சாரப் பாராட்டிவிட்டு, "மகனின் திருமணத்தை வைத்திருக்கிறேன். திருமணம் முடிந்து மணமக்களுடன் வந்து தங்களிடம் சென்னையில் வாழ்த்துப் பெறுகிறேன்" என்றார். ஆனால் இன்று மகனின் திருமணம் நடந்தேறி வந்து கொண்டிருந்தபோதே, அவருக்குத் திடீர் மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைந்தார் என்ற செய்தி, என்னை ஆழ்ந்த வேதனையிலும், அதிர்ச்சியிலும் ஆழ்த்தியது.

திரு.கோவை செல்வராஜ் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி

# இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றிய வாக்குச்சாவடி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் -மேயர் ரெ.மகேஷ்- எஸ்.ஆனந்த் ஆலோசனை வழங்கினர்!

கன்னியாகுமரி, நவ.10-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி, இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றிய வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம் இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.சற்குரு கண்ணன் தலைமையில், நாகர்கோவில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ். ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டு BLA2 சரிபார்ப்பு மற்றும் திருத்த பணிகள் மேற்கொள்வது தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்கள்.

கூட்டத்தில் நாகர்கோவில் மாநகர அவைத் தலைவர் ப.பன்னீர் செல்வம், மாநகர துணை செயலாளர் பி.வேல்முருகன், கணபதிபுரம் பேரூர் செயலாளர் யோ.பிரபா எழில், நாகர்கோவில் மாநகர பகுதி செயலாளர்கள் இ.ஜவகர், மு. சேக்மீரான் உட்பட வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2), கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம் எண்: 1: கழக மாநில இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளான நவம்பர் 27 தினத்தை இளைஞர்களின் எழுச்சி நாளாக கொண்டாடுவது எனவும், மேலும் இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றிய கழகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் இனிப்புகள் வழங்கிடவும், ஏழை, எளிய மக்கள் பயன் பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கிட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம் எண்: 2: 2025 ஜனவரி 1ம் தேதியை தகுதி ஏற்கும் நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த பணிகள் முதற்கட்ட பணியாக மேற்கொள்ள தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. மேலும் தங்களது பகுதியில் அமைந்துள்ள வாக்குச் சாவடிகளில் 16.11.2024 சனி, 17.11.2024 ஞாயிறு மற்றும் 23.11.2024 சனி, 24.11.2024 ஞாயிறு ஆகிய நாட்களில் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. அதன்படி புதிய வாக்காளர்களை சேர்க்கவும், வாக்காளர் பட்டியலில் வாக்காளர் நீக்கம், பெயர், முகவரி திருத்த பணிகளை வாக்குச்சாவடி அலுவலர்களுடன் இராஜாக்கமங்கலம் ஒன்றிய கழக நிர்வாகிகள், BLA2 ஆகியோர் இணைந்து மேற்கண்ட பணிகளை செய்வது என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் எண்: 3: 2026 ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 200க்கும் அதிகமான இடங்களில் கழகம் வெற்றி பெற்று மீண்டும் நமது கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை முதல்வராக்க நாம் அனைவரும் ஒற்றுமையுடன் பணியாற்ற வேண்டும் எனவும், களப்பணியை தீவிரப்படுத்த வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.





கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி, இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றிய வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம் இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.சற்குருகண்ணன் தலைமையில், நாகர்கோவில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலையில் மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ், நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டு BLA2 சரிபார்ப்பு மற்றும் திருத்த பணிகள் மேற்கொள்வது தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்கள். கூட்டத்தில் ப.பன்னீர் செல்வம், பி.வேல்முருகன், யோ.பிரபா எழில், இ.ஜவகர், மு.சேக்மீரான் உட்பட வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2), கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 3 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

விருதுநகர் வடக்கு மாவட்டத்தில்

# சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக முகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!

விருதுநகர், நவ.10-

விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:



**திருச்சுழி சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் கூட்டம்**

கூட்டம் நடைபெறும் ஒன்றியம் / பேரூர்/தேதி/கிழமை/நேரம்/ இடம் வருமாறு:-

திருச்சுழி தெற்கு-11.11.2024 திங்கள் -மாலை 4 - சத்யா மஹால், எம்.ரெட்டியாபட்டி, திருச்சுழி

திருச்சுழி வடக்கு - 11.11 .2024 திங்கள்-மாலை 5 - ஒன்றியக் கழக அலுவலகம், திருச்சுழி

நரிக்குடி வடக்கு 12.11. 2024 செவ்வாய் - காலை9 - சமுதாயக்கூடம், மறையூர்

நரிக்குடி தெற்கு-12.11 .2024 செவ்வாய் - காலை 10 - எம்.பி.தோட்டம், நரிக்குடி

காரியாபட்டி மேற்கு - 12.11.2024 செவ்வாய் - மாலை 4 - இராஜாமணி திருமண மண்டபம், மல்லாங்கிணறு

காரியாபட்டி கிழக்கு -12.11.2024 செவ்வாய் - மாலை 5- சமுதாயக் கூடம், முடுக்கன்குளம்

காரியாபட்டி பேரூர் -13.11.2024 புதன் - மாலை 5 - திருச்சுழி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், காரியாபட்டி

மல்லாங்கிணறு பேரூர் -13.11.2024 புதன் - மாலை 6 - மாவட்டக் கழக அலுவலகம் மல்லாங்கிணறு

சிவகாசி தெற்கு - 12.11. 2024 செவ்வாய்- மாலை 5 - சமுதாயக் கூடம், இந்திரா நகர்

சிவகாசி கிழக்கு- 12.11 .2024 செவ்வாய் - மாலை 6 - சமுதாயக் கூடம், ஆனையூர்

**விருதுநகர் சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் கூட்டம்**

விருதுநகர் வடக்கு 10.11 .2024 ஞாயிறு - மாலை 4 - ஜெய் ஹோட்டல், விருதுநகர்

விருதுநகர் நகரம் - 10.11. 2024 ஞாயிறு - மாலை 5 - வி.வி.எஸ்.திருமண மண்டபம், விருதுநகர்

விருதுநகர் மேற்கு-11.11 .2024 திங்கள்- காலை 10- அன்னை மஹால்,

ஆர்.ஆர்.நகர்

சிவகாசி வடக்கு - 11.11. 2024 திங்கள் - காலை 11- சமுதாயக்கூடம், புதுப் பட்டி

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் படி மதுரையில் நடைபெற்ற தி.மு.க. இளைஞரணி மண்டலம் 8 ஆலோசனைக் கூட்டத்தில் மண்டல பொறுப்பாளரும், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளருமான ஜி.பி.ராஜா பேசினார். உடன் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் தனுஷ் குமார், கிருஷ்ணகுமார், சம்பத் ராஜா, செல்வம், ஆஜிப்கான், கிருஷ்ணராஜா, முகேஷ், முத்து செல்வம் மற்றும் மாவட்ட, மாநகர துணை அமைப்பாளர்கள் உள்ளனர்

ஆவுடையார்கோவில்

# புதிய வழித்தட பேருந்து சேவை!

புதுக்கோட்டை, நவ.10-

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் பேருந்து நிலையத்திலிருந்து, புதிய வழித்தட பேருந்து சேவை யினை, பிற்படுத்தப்பட்ய டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 07.11.2024 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், பொதுமக்களுக்குத் தேவையான, குடிநீர் வசதி, சாலை வசதி, பேருந்து வசதி, சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி புதிய வழித்தட பேருந்து சேவை துவக்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், புதுக்கோட்டை மண்டலம் சார்பில் இந்த பேருந்து சேவையானது, ஆவுடையார் கோவிலில் இருந்து காலை 7.25 மணிக்கு புறப்பட்டு பன்னியூருக்கு சென்றடைகிறது. இதே போன்று பன்னியூரில் இருந்து காலை 7.45 மணிக்கு புறப்பட்டு ஆவுடையார்கோவிலுக்கு சென்றடைகிறது. இதன்மூலம் இப்பகுதி பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறை வேற்றப்பட்டுள்ளது. எனவே இப்பகுதி பொதுமக்கள் அனைவரும் இந்த பேருந்து சேவையினை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குன்னூர் மு. அரங்கநாதன்
### நவம்பர் 10 (2014)



நீலகிரி மாவட்டத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவர்.

குன்னூர் நகர பொருளாளர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

குன்னூர் நகராட்சித் தலைவர், குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் நலப்பணிகளை சிறப்பாக செயல்படுத்தியவர்.

கழகப் பணியில் தொய்வு ஏற்படக்கூடாது என்று திருமணம்கூட செய்து கொள்ளாதவர்.

இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து பலமுறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறைமுகம் நா. இராமதாஸ்
### நவம்பர் 10 (2016)



துறைமுகம் பகுதி வட்டாரத்தின் ஆரம்ப கால கழகத் தோழர்.

கழகத்திற்கு, தொடக்க காலத்தில், பகுதிச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டபோது, துறைமுகம் பகுதிக் கழகத்தின் செயலாளராக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புக்குரியவர் இவர்.

கழக மூத்த தலைவர்களுடனும், முன்னோடிகளுடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்.

ஸ்டான்லி அரசு பொது மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.